இலங்கை வித்திய போதினி

THE CEYLON

JOURNAL OF EDUCATION

(Tamil Section.)

தொகுதி : **6** | செப்றெம்பர் – **1948** | பகுதி : **8**

காந்திஜீ கண்ட கல்விமுறை.

காந்திஜீயைப்பற்றிப் பேசாத நாளே கிடையாது. அவர் பெருமையைப் பேசாத நாளெல்லாம் பிறவாத நாளேயென்று உலகம் அவர் புகழைப் பாடி இன்பமடைகிறது. ஆனால் காந்திஜீயின் பெருமையோ ஆழ்ந்து அகன்று நிலத்தை வலயமாகச் சுற்றிக்கிடக்கும் சமுத்திரம் போன்றது. அளக்கலாகா ஆழமும் அகலமும் உடையது. காந்திஜீயின் ஆத்மபாவம் ஒளிவிட்டிலங்கும் பலமுகமுடைய வைடூரியம். திரும்பிய பக்கத்துக்கெல்லாம் கண்ணைப் பொறித்தட்ட மின்னி ஒளிபெறச் செய்கிறது. வைடூரியம் புறவொளியால் மின்னுவது. ஆனால் காந்திஜீயோ உள்ளொளியால் திசையெங்கும் இருளகற்றி நம் தேச வாழ்வின் மூலை முடுக்கெங்கும் ஒளியைப் பரப்பியிருக்கிறார். "உள்ளத்தாற் பொய்யா தொழுகி உலகத்தார் உள்ளத்து ளெல்லாம்" நிறைந்தார். உலகத்தில் நாமிழந்த தன்மதிப்பை மீட்டு நம்மைத் தலைநிமிர்ந்து நிற்கச் செய்தார். மேல் நாட்டவரின் விவேகத் தளையிலிருந்து நம்மை விடுவித்தார். மனித சேவையே மேலான ஈஸ்வர தியானம் என்பதைக் காட்டினார். தனிப்பட்ட வாழ்விலும் அரசியல் வாழ்விலும் ஒழுக்க நெறியே மேலானது; சத்தியமும் அஹிம்சையுமே உலகுக்கு விமோசனமும் சாந்தியு மளிக்கும் என்பதை அறிவுறுத்தினார். வாடிச்

செயலற்றுக்கிடந்த அடிமைகளுள்ளத்தில் சுதந்திர தாகத்தை ஊட்டினுர். சத்திய வாளுந் தியாகத்தோலும் கொண்டு சண்டை செய்யுமாறு ஊக்கினுர்; மனத்திலே கோபமோ குரோதமோ எள்ளளவும் வையாது சண்டையிடச் சொன்னுர். உலகத்திலே எங்கே அநீதியும் கொடுமையுமிருக்கின்றனவோ அங்கெல்லாம் போரைத் தொடுக்கச் செய்தார். தொட்டால் தீட்டென்று மதத்தின் பெயரால் மக்கள் ஒதுக்கிவைத்த கூட்டத்தவரை தெய்வத்தின் குழந்தைகள்; ''ஹரிஜனங்கள்'' என்று உயர்த்தி வைத்தார். சொன்னதை அவர் செய்யவில்லை. செய்ததையே சொன்னுர். எனவே நம் வாழ்வில் எல்லாத்துறையிலும் - அரசியல் முதல் மாங்காய் விதையிலுள்ள உணவுச்சத்துவரை - எலலாவற்றிலும் இந்த யுகத்து வாழ்வு அவருடைய சன்மார்க்க முத்திரையைப் பெற்றுவிட்டது. இருபதாம் நூற்றுண்டின் இந்திய சரித்திரம் மகாத்மாவின் சரித்திரமென்றே கூறலாம்.

ஆனுல் இப்பொழுது கல்வித் துறையில் அவர் காட்டிய புது வழியைப்பற்றி சிறிது கூற விரும்புகிறேன். தற்காலக் கல்விச் சித்தாந்தங்கட்கும் போதனுமுறைகட்கும் ஆதி கர்த்தாவாயுள்ளவர் பெட்ஸலோஸ்ஸி என்னும் மோதவியென்று கல்வி முறையின் சரித்திரத்தை எழுதிய கிறீன் என்ற ஆசிரியர் கூறுகிறுர். மேலைத் தேசக் கல்வியைப் பொறுத்தவரையில் இது உண்மையே கீழைத் தேசங்களிற் புதிய கல்விச் சித்தாந்தத்தை முதல் முதல் கண்டவர் மகாத்மா காந்தியே. பெட்ஸலோஸ்ஸியை மேல்நாட்டார் தந்தையென்ற காரணப் பெயர் சூட்டிப் போற்றுகிறுர்கள். காந்திஜீயும் எங்கள் நாட்டின் பாபுஜீதான். தேசத்தின் தந்தை. ஜகத்குரு.

வித்தியா விற்பன்னரின் கடமையென்ன? மக்களின் மனத்தையும் ஒழுக்கத்தையும் பயிற்றி அவர்களிடத்து அவ்வியக்தமாக அடங்கிக்கிடக்கும் சக்திகளை மலரச்செய்து கையிலே கரந்துறையும்

கைவினைத் திறமைகளையும் ஆக்கத் திறமைகளையும் வளர்ப்பதல்லவா? ஒவ்வொருவருடைய அகத்திலும் வியாபித்திருக்கும் ஆழ்ந்த ஆத்ம சக்தியைத் தூண்டி நெறிப்படுத்திச் சீவாத்மன் பரமாத்மனை யுணரச் செய்வதன்றோ? சிறு மதியுஞ் சிறு செயலும் கைவிட்டுப் பெருமதி யும் பெருவாழ்வும் பெறச்செய்வதன்றோ? இந்தவகையில் மகாத்மா காந்தி "பருவமதறிந்துநல் லருளான குளிகைகொடு பரிசித்து வேதி செய்து" உலகுக்கே ஒப்புயர்வற்ற பேராசிரியராய் விளங்கினர். வாழ்க்கையில் ஏற்படும் பொறுப்புகளைச் சரிவர ஏற்கவும் கஷ்டங்களை நிர்வகிக்கவும் ஏற்ற முறையில் மாணவர்க்குப் பயிற்சியளிப்பதற் காகப் பாடசாலையிற் கல்வியைப் போதிப்பதோடு புதிய போதனு முறைகளையும் கல்வி முறைகளையும் கால தேச நிகழ்ச்சிகட்கேற்ப வகுப்பதும் ஆசிரியரின் பெரிய கடமையாகும். அந்த வகையிலும் காந்திஜீ வார்தா கல்வித்திட்டமென்ற புதியதொருமுறையைவகுத்தார்.

பல நூற்றுண்டாகவே இந்தியாவில் விதேசிக் கல்வி யளிக்கப் பட்டு வந்தது. நூல்களைப் பயில்வதும் அந்நியராட்சியை நிர்வகித்து நடத்துவதற்கான சில வினைத்திறமைகளைப் பயில்வதுமே கல்வியின் நோக்கமாயிருந்துவந்தது. இதனுல் வாழ்வுக்கும் கல்விக்குமுள்ள சீவாதாரமான தொடர்பை மறந்துவிட்டனர். இதையுணர்ந்த அறிஞர் பலர் கல்வி முறையைக் கண்டித்தும் சில சில திருத்தங்களைச் செய்தும் வந்தனர். ஆனுல் பிரத்தியட்சமான பலனெதுவும் உண் டாகவில்லை. காந்திஜீ பலகாலமாகவே கிராமப்புனருத்தாரண வேலை யிலீடுபட்டிருந்தார். ஹரிஜன வேலையில் முயன்றுவந்தார். அரசியற் கிளர்ச்சிகளை ஆரம்பித்தார். இதனுல் இந்தியாவின் நாடித்துடிப் பொவ்வொன்றையும் அவர் கேட்கக் கூடியதாயிருந்தது. கல்வித் துறையில் பெரிய மாறுதலை யுண்டாக்காவிட்டால் தாம் கற்பனை செய்துகொண்ட புதிய சமூக அமைப்பை உண்டாக்கமுடியாதென உணர்ந்தார். எனவே 1937-ல் இந்தியக் கல்விமுறையில் குறைகளை யெடுத்து விளக்கி "ஹரிஜன்" பத்திரிகையில் பல கட்டுரைகளை யெழு

தினர். தற்போதைய கல்விமுறை விழலுக்கிறைத்த நீர். அதுமாத்திரமன்று. பெரிய கேட்டுக்குங் காரணமானது. மாணவர் பெற்றோருக்கும் உதவாதவர்களாய் பரம்பரைத் தொழிலையுஞ் செய்யமாட்டாதவர்களாய் இருக்கிறார்கள். பட்டணப் பழக்கங்களைப் பின்பற்றுவதோடு தீய பழக்கங்களைப் பழகியுங் கொள்ளுகிறார்கள். அதிலேயும் இதிலேயுமாய்ச் சொற்ப அறிவையுந் தேடுகிறார்கள். ஆனால் அது கல்விப் பயிற்சியன்று" என்று எழுதினர். கல்வி நிபுணர்கள் முக்கியமில்லாத அற்ப விஷயங்களைப்பற்றி பெரிய வாதமிட்டுக்கொண்டிருந்தனர். ஆனால் ஊடுருவிப் பார்க்குமியல்புள்ள காந்திஜீ நோயை இன்னதென்று விரைவிலறிந்துகொண்டார். கல்வியென்பது சிறுவனிடத்தும் மனிதனிடத்தும் உள்ள விசேஷ சக்திகளை வெளிப்படுத்துவது. காயம் மனம் ஆத்மா மூன்றிலுமுள்ள - சக்திகளுந்தான். எழுத வாசிக்க அறிந்துகொள்வதுதான் கல்வியின் நோக்கமன்று. அது பலவேறு சாதனங்களிலொன்று. அது கருவி. காரியம் வேறு. எழுத்து வாசினையென்பன கல்வியென்றொரு பொருள் இருக்கிறதென்பதற்கு அறிகுறிகள். கல்வியைப் பெறுவதற்கு இவை அவசியந்தான். கல்வியின் ஊற்று அடைபடாமல் இருக்கும்வரை இவை அவசியம். கல்வியினூற்றைத் தூரவிடாது காப்பாற்றுவன வேலை, அவதானித்தல், ஆராய்தல் தொண்டுசெய்தல், அன்புகொள்ளல், என்பனவாகும். இவையில்லையேல் வெறும் புத்தகப்படிப்பினால் ஆத்மா வளர்ச்சி குன்றி மாணவனின் விவேகமும் அனுமானத் திறமையும் துருப்பிடித்து உடம்புகூடக் கெட்டுப்போகும்.

சிறுவர் சிறுமியரைப் பயனுள்ள குடிகளாக்காத கல்வி நல்ல கல்வியன்று. அத்தகைய கல்வியைத் தொழிற்பயிற்சி மூலமும் கைவேலை மூலமும் பயிற்றவேண்டுமென்பதே காந்திஜீயின் கொள்கை. சரீர வேலை உயர்வுடையது. ஆதலால் கல்விமுறையிலும் பாடசாலைப் பாடத்திட்டத்திலும் கைவேலைக்கு உயர்ந்த இடமிருக்கவேண்டும்.

1937-ல் வார்தா கல்வி முறையைப்பற்றி காந்திஜீ எழுதுவதற்கு முன்னரே தமது கல்விக் கொள்கைகளை அவர் நடைமுறையிற் செய்து பார்த்து அவற்றின் பயனையும் தகுதியையும் உணர்ந்துகொண்டார். தென்னாப்பிரிக்காவில் டோல்ஸ்டோய் பண்ணையில் தமது பிள்ளைகட்கும் வேறு சிறுவர் சிறுமியர்க்கும் கல்வி பயிற்றுதற்காக ஒரு பாடசாலையை ஆரம்பித்தார். அங்கே வீட்டுவேலை தச்சுவேலை முதலிய வேலைகள் மூலம் மாணவர்க்குக் கல்வி புகட்டினார்.

இந்தியாவுக்கு வந்ததும் சபர்மதி ஆச்சிரமத்தில் இந்த முறையைத் தொடர்ந்து நடத்தினர். சரீரவேலை மூளைவேலையிலும் பார்க்க இழிவானதென்ற எண்ணம் படித்த இந்திய வாலிபரிடையே இருந்து வந்தது. இது தவறென்பதை யெடுத்துக்காட்டுவதே அவருடைய பெருமுயற்சியாயிருந்தது. வாழ்வுப்பணிக்கு ஏற்ற ஒரு நல்ல அத்திவாரத்தை யமைக்கவேண்டுமானல் குரலுக்குப் பயிற்சியளிப்பது போலவே விரலுக்கும் போதிய பயிற்சியளிக்கவேண்டும். கசரத்தும் தேகாப்பியாசமும் கைவேலையும் சித்திரம் வரைதலும் சங்கீதமும் எல்லாம் ஒன்றுக்கொன்று குறைவின்றிப் பயிற்றப்படவேண்டும். அப்பொழுதுதான் சிறுவரிடத்து விளங்கும் விசேஷ திறமைகளை மலரச்செய்து கல்வியில் அவர்களுக்கு ஊக்கமுண்டாக்கலாம்.

கிராமச் சிறுவரைக் கல்வியில் பற்றுள்ளவராக்க வேண்டுமானல், ஆரோக்கியமான வளர்ச்சியை உண்டாக்க வேண்டுமானல், அவர்களை அவர்களுடைய இயற்கைச் சூழலில் விட்டுப் பயிற்றவேண்டும் இது எப்படி முடியும்? அவர்களுக்கு வாலாயமான ஒரு கைத்தொழில் மூலம் சாத்திரங்களையும் கலைகளையும் பயிற்றிக் காரியபூர்வமான பயிற்சியை அக் கைத்தொழிலிற் கொடுக்கவேண்டும். இவ்வாறு பூரணமான கல்வியைப் புகட்டவேண்டும்.

காந்திஜீ கண்ட இக்கல்வித் திட்டத்தில் அடிப்படையாவது கைத்தொழில் மூலமாகவே பாஷைப் பயிற்சியையும் விவேக வளர்ச்சியை

யும் உண்டாக்க வேண்டுமென்பதே. காந்திஜீ கூறுவதாவது "ஒரு தச்சன் எனக்குத் தச்சுவேலை பயிற்றுகிருன் என்று வைத்துக்கொள்ளுவோம். அதை நான் யந்திரம் போலப் பார்த்துச் செய்து பழகிக் கொள்ளுகிறேன். பல விதமான ஆயுதங்களின் உபயோகத்தையும் அறிகிறேன். ஆனல் இவ்வளவில் எனது விவேகம் விருத்தியடைய மாட்டாது. ஆனல் சாத்திர ரீதியாகத் தச்சுவேலை பயின்ற ஒருவர் எனக்குப் பயிற்சி அளிப்பாராஞல் எனது விவேகமும் அருட்டப் படும். இதனல் நான் தச்சுவேலையை அறிந்திருப்பதோடு எந்திர விற்பன்னனுகவும் வந்துவிடுவேன். ஏனெனில் எனது ஆசிரியர் எனக்குக் கணிதம் சொல்லுவார். மரங்களின் வகைகளைப்பற்றிக் கூறி அவை எங்கிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றனவென்று மறிவிப்பார். இதனல் பூமிசாத்திர அறிவு உண்டாகிறது. இதோடு சொற்ப விவசாய அறிவும் வந்துவிடுகிறது. நான் உபயோகிக்கும் ஆயுதங்களின் படங்களைக் கீறவும் பயிற்றி அதன் பயனுகச் சிறிது கேத்திரக் கணிதமும் பாடீ கணிதமும் சொல்லி வைப்பார்."

செய்து பார்த்துப் பயிலுவதால் சிறுவரிடத்துத் தன்னம்பிக்கையும் உற்சாகமும் உண்டாகுமென்பதே காந்திஜீயின் கருத்து. தன்னை வெளிப்படுத்தும் இந்த ஆக்க வேலையினல் பின்னர் கூட்டு முயற்சி உண்டாகும். கூட்டுமுயற்சியிலே சகிப்புத்தன்மை மற்றவர்களிடத்து அனுதாபம் சகோதர மனோபாவம் முதலியன வளருகின்றன.

எனவே புரட்சிகரமான இந்தக் கல்வித் திட்டத்தை அவர் வெளியிட்டார். இந்தியாவிலுள்ள எல்லாச் சிறுவர் சிறுமியர்க்கும் ஏழு வருடக் கட்டாய இலவசக் கல்வி உடனே கொடுக்கப்படவேண்டும். இது தாய்ப் பாஷை மூலம் அளிக்கப்படவேண்டும். புத்தகக் கட்டுக்களைத் தலையைச் சுற்றி வீசிவிட்டு இடத்துக்கேற்ற முக்கியமான ஒரு கைத்தொழிலை மையமாக வைத்துக்கொண்டு அதன்மூலம் அவர்கள் உருப்படியான விற்பனை செய்யக்கூடிய பொருட்களைச் செய்ய

வேண்டும். இவ்வாறு விற்று வரும் பணத்தைக்கொண்டு ஆசிரியர்க்குச் சம்பளம் கொடுக்கவேண்டும், என்றெல்லாம் விளக்கினர். மாணவர் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்து பணம் பெறவேண்டியது முக்கியமெனக் கொண்டார். ஏனெனில் இப்பிரமாண்டமான திட்டத்துக்கு அரசாங்கம் பொருள் செலவிடுவதானல் முடியாத காரியம் என்று கல்வித் திட்டத்தைப் பின்போட்டு விடக்கூடும். வினோதார்த்தமாகவோ கல்விக்கனுகூலமான விளையாட்டென்று கருதியோ கைத்தொழிலை மேற்கொள்ள வேண்டாம். மாணவரை வினைத்திறமையுள்ள தொழிலாளராக்க வேண்டும். அதனல் அவர்களுடைய கையும் மனமும் பயிற்சி பெறுவதோடு ஒழுக்கமும் உருவாகவேண்டும் என்பதையே முக்கிய நோக்கமாகக் கொள்ளவேண்டும் என்று எச்சரிக்கை செய்தார்.

கல்வியுலகில் பெரிய புயல் கிளம்பிற்று. கந்தோரில் கடதாசிக் கட்டுகளும் உத்தியோக அறிக்கைகளுமே சர்வானுகூல சாதனமென்று எண்ணிக்கொண்டு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு கல்வி நிர்வாகம் நடத்தியவர்கள் தட்டுக் கெட்டனர். "ஏட்டுச் சுரைக்காய், உது கறிக்குதவாது" என்று அவர்கள் "பூ பூ" என்ருர்கள்.

வார்தாவில் கல்வியாளர் மகாநாடொன்றைக் கூட்டித் தனது திட்டத்தை ஆராயும்படி செய்தார் காந்திஜீ. ஸாகீர் ஹுஸேன் தலைமையில் ஒரு விசாரணைச் சபை ஏற்படுத்தப்பட்டது. அடிப்படைக் கல்விக்கான ஒரு பாடத்திட்டத்தை காந்திஜீயின் கல்வித் தத்துவங்களுக்கு ஏற்ற முறையில் வகுக்குமாறு இச்சபையினர் வேண்டப்பட்டனர்.

வாழ்வு கருமத்தை அச்சாணியாகக் கொண்டது. கருமத்துடன் தொடர்பில்லாத கல்வியும் செயலோடு சம்பந்தமில்லாத எண்ணமும் வீண். அபாயகரமான வாழ்வுக்குப் பயன்படாத தொடர்பற்ற எத்தனை பாடங்களைப் படித்தாலுமென்ன? காரண காரியத் தொடர்பையும், ஆழத்தில் அமிழ்ந்திக் கிடக்கும் சமூக சம்பந்தங்களையும் அறிவுத் தொடர்புகளையும் விளங்கிக்கொள்ளாது எந்திரம்போலச் செய்யப்படும் சரீர உழைப்பினுலும் பயனில்லை. அப்படியானல் மாணவர் பள்ளிக்கூடங்களுக்கே போகவேண்டியதில்லை. வீட்டிலிருந்

துகொண்டே வீட்டு வேலைகளைப் பார்த்துக்கொண்டு தொண்டு செய்து தொழிலின் மகிமையை உணர்ந்து கொள்ளலாம். விவசாயம் கைத் தொழில் முதலியவற்றிலீடுபட்டு அயலவர்க்கு ஒத்தாசை செய்யலாம். கைத்தொழிலே கல்வியின் அச்சாணியாக இருக்கவேண்டுமென்பதே காந்திஜீயின் மூலமந்திரம்.

வாழ்க்கைத் துறையில் புதிய ஒரு பெருவாழ்வு உண்டாகவேண்டு மென்ற எண்ணத்தைக்கொண்டே கல்வித்துறையில் காந்திஜீ இப்புது வழியைக் கண்டார். வெளியுலகின் குறுகிய தோற்றமே பாடசாலை. அது வெளியுலகின் வாமனரூபம். உலகத்தில் யுத்தம் ஒழியவேண்டும். தேசங்களிடையே சமாதானமும் போட்டியில்லாத கூட்டுறவு மனோ பாவமும் மலரவேண்டும். அதற்கு அஹிம்சையும் சத்தியமும் வேண்டும். இவ்விரு தருமங்களையும் வாழ்வின் அத்திவாரமாகக் கொள்ளவேண்டும். அது வார்தா கல்வித்திட்டத்தின் மூலந்தான் கைவரும். அறிவு பெருகினால் மாத்திரம் போதாது. ஒழுக்கம் சிறக்கவேண்டும். ஊணும் உடையும் வீடுவாசலும் இருந்தால் மாத் திரம் போதாது சொல்லும் செயலும் தூய்மையுடையதாயிருக்க வேண்டும் சமூகத்திலே பகையோ பொறாமையோ போட்டியோ இருக்கக்கூடாது உயர்வு தாழ்வு பாராட்டக்கூடாது. தன்னலமற்ற சேவைசெய்ய சிறுவர் சிறுமியரைப் பழக்கவேண்டும். தன்னினத் துக்கு மாத்திரமன்று—தன் தேசத்துக்கு மாத்திரமன்று—உலகத் துக்கு—மனித இனத்துக்கு—இந்த உயர்ந்த கொள்கைக்கு இந்தியா நிலைக்களமாயிருக்கவேண்டும். இதெல்லாவற்றுக்கும் வார்தா திட்டம் வழிகாட்டும் என்று காந்திஜீ நம்பினார். அணுக்குண்டுக்கு மாற்று அஹிம்சை. அதைப் பரப்பும் முறை வார்தா கல்விமுறை.

உலகெங்கும் பெருஞ் சண்டமாருதம் அடித்துக்கொண்டிருந்தது. கடவுளின் அம்சம்போலத் தோன்றிய காந்தி உலகுக்கு ஒளிகொடுக்க இந்தியாவின் ஒரு மூலையில் ஒரு சிறு குடிசையிலிருந்துகொண்டு இச் சிறு தீபத்தை ஏற்றிவிட்டார். இது அமரசோதி.

சோ. நடராஜன்.